DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW.9

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **எழிலரசன்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 24.02.2026

(Accused present.)

சாட்சி அரசு தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியங்களுக்காக விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் துறையூர் காவல் நிலையத்தில் கணினி பதிவு காவலராக பணியாற்றி வருகிறேன். கணினி இயக்குவது சம்பந்தமாக எனக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் திரு.முத்தையன் அவர்கள் கிருஷ்ணமூர்த்தி கொலை வழக்கு சம்பந்தமாக ஒரு வீடியோ ஆதாரம் கிடைத்திருப்பதாகவும், அந்த ஆதாரம் தனிஷ்குமார் என்பவரது கைபேசியில் இருப்பதாகவும், அதை பதிவிறக்கம் செய்து சான்றிதழ் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் 31.7.2025 அன்று தனிஷ்குமாருடைய கைபேசியிலிருந்து காவல்நிலையத்தில்

இருக்கும் கணினியில் பதிவிறக்கம் செய்து, பின்னர் அதை Pen Drive ல் பதிவிறக்கம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் Pen Drive தான் நான் பதிவிறக்கம் செய்து கொடுத்ததாகும். அது **சா.பொ.8.**, நான் அளித்த சான்றிதழ் **அ.சா.ஆ.6.**, ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

ஆய்வாளர் விசாரித்தபோது இந்த விவரங்களை நான் சொன்னேன். தனிஷ்குமார் அவருடைய கைபேசியை எந்த தேதியில் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆய்வாளர் அந்த கைபேசியை என்னிடம் 20.7.2025 அன்று கொடுத்தார். நான் மொபைல் ஒப்படைத்ததிலிருந்து 10 நாட்கள் கழித்துதான் பதிவிறக்கம் செய்தேன். நான் 31.7.2025 தேதியில் பதிவிறக்கம் செய்திருப்பேனா என்றால் செய்திருப்பேன். பதிவிறக்கம் தேதியன்றுதான் நான் சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான். சான்றிதழில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுத்த கைபேசியால் அந்த வீடியோ பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த வீடியோ Whatsapp App ல் இருந்தது என்றால் சரிதான். அந்த வீடியோ எந்த Whatsapp எண் அல்லது எந்த குழுவில் இருந்தது என்பதை சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். செல்போனுடைய Recorder பகுதியில் இந்த வீடியோ இருந்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. அந்த தொலைபேசியை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 31.7.2025 ம் தேதியே நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேனா என்றால் ஒப்படைத்துவிட்டேன். 31.7.2025 ம் தேதி ஒப்படைத்திருப்பேனா என்றால் ஒப்படைத்திருப்பேன். அதன்பிறகு அந்த செல்போன் ஆய்வாளர் பாதுகாப்பில் இருந்தது என்றால் நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். அந்த செல்போன் என்னுடைய பாதுகாப்பில் இருந்தது என்று என்னுடைய சான்றிதழில் சொல்லியிருப்பது

தவறா என்றால் சரிதான். நான் வழங்கிய சான்றிதழ் என்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புதிய சாட்சிய சட்டத்தின் கீழ்தான் நான் சான்றிதழ் வழங்கியுள்ளேனா என்றால் நான் பழைய சட்டத்தின் கீழ் வழங்கியுள்ளேன். சான்றிதழில் சொத்தின் உரிமையாளர் யாரென்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் Pen Drive ல் வீடியோ பதிவு செய்து கொடுக்கவில்லை என்றாலும், நான் சான்றிதழ் வழங்கவில்லை என்றாலும், ஆய்வாளர் தயார் செய்த சான்றிதழில் கையொப்பம் போட்டுவிட்டு, அதற்கேற்றால் போல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M
Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.24 17:19:45 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180 / 2024**

Prosecution Witness No. PW.10

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **முத்துசாமி** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 24.02.2026

(Accused present.)

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மாவட்ட குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் சம்பவ காலத்தில் துறையூர் கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். 11.3.2024 அன்று நான் துறையூர் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, இரவு சுமார் 8.30 மணியளவில் கலைச்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று, துறையூர் கா.நி.கு.எண்.67/2024, ச.பி. 341, 294(b), 302, 506(ii) இதச கீழ் வழக்கு பதிவு செய்து, அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை துறையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு காவலர் ஆனந்தன் மூலமாக அனுப்பி வைத்தேன். அதன் நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளருக்கும்,

மேலதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7.**, இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

புகார்தாரர் நிலையம் வந்தபோது இரவு 8.30 மணி இருக்கும். புகாரை அவர் எழுதி எடுத்து வந்தார் என்றால் சரிதான். இந்த புகார் யாரால் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முடித்த போது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு 9.00 மணி இருக்கும். உடனே நான் நீதிமன்றத்தில் கொடுக்க சொல்லி, காவலரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி, நேரம் என்பது 11.3.2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திலிருந்து அரை கி.மீ. தூரத்தில் தான் நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை மறுநாள் அதிகாலை 1.40 மணிக்குதான் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை வழக்கின் தன்மைக்கேற்ப காலை 1.00 மணிக்குமேல் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரின்பேரில் கு.எண். 68/2024 என்ற எண்ணில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.24 17:20:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.